# Sub Court, Eraniel

O.S. No.58/2024
Date:11.03.2026.
PW1 - திரு. தாமஸ் மத்தியாஸ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் Francis Xavier பொறியியல் கல்லூரி, திருநெல்வேலியில் உடற்கல்வி இயக்குநராக பணியில் இருக்கிறேன். 1ம் பிரதிவாதி புஸ்பராஜ் சிறிது காலங்கள் வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால், சரிதான். அவர் வெளிநாட்டில் இருந்த பொழுது அவருடைய மனைவி வழக்கு பட்டிகை வீட்டில் தனியாக இருந்தார் என்றால், சரியல்ல. அவருடைய 2 மகன்களுடன் இருந்தார். எனது தாத்தா பெயர் தேவசகாயம். தேவசாகாயம் அவரது உயிலில் அவருடைய 2 மகன்களுக்கும் சர்வே எண்.139/1ல் கிடைத்த சொத்தை ஆளுக்கு பாதி என்று எழுதி வைத்தார் என்றால், சரிதான். அந்த உயில் ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தந்தை ஞானப்பிராகசம் அவருக்கு கிடைத்த சொத்தை பல நபர்களுக்கு கிரயம் கொடுத்து விட்டார் என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். அதில் 1ம் பிரதிவாதிக்கு 1994ம் ஆண்டு 2.500 சென்ட் நிலம் கிரயம் கொடுக்கப்பட்டது என்றால், சரிதான். தாமஸ் ஞானராஜ் என்பவருக்கு 6.500 சென்ட், 1981ம் வருடம் அருள்மேரிக்கு 9 சென்ட்கள் விலை கிரயம் கொடுக்கப்பட்டது. ராஜையாவிற்கு 5.250 சென்ட் கிரயம் கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. 5 சென்ட் கிரயம் கொடுக்கப்பட்டது. அகஸ்டினுக்கு 7.500 சென்ட் கொடுக்கப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6ல் சர்வே எண்.139/1ல் 20.5 ஏர் என்று குறிப்பிட்டுள்ளது என்றால், சரிதான். அதன்படி 20.5 ஏரில் எனது தகப்பனார் மரிய ஞானப்பிராகசத்திற்கு 10.25 ஏரும் அவருடைய தம்பி மரிய மிக்கேலுக்கு 10.25 ஏரும் உரிமைப்பட்டது என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 பட்டாவில் உள்ள அளவு தவறு என்று நான் வருவாய் துறை அலுவலர் மூலமாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 20.5 ஏரின் மொத்த விஸ்தீரணம் என்பது 50 சென்டும் 635 சதுர லிங்க்ஸ் என்றால், அது விபரம் எனக்கு தெரியாது. 1 ஏர் என்பது 2.47 சென்ட்கள் என்றால், அது விபரம் எனக்கு சரியாக தெரியவில்லை. எனது தகப்பனாருக்கு 25.317 சென்ட்கள் தான் கிடைத்தன என்றால், சரியல்ல. அந்த மொத்த 25.317 சென்டில், எனது

தகப்பனார் புஸ்பராஜ், அருள் மேரி, ஞான ராஜ், ராஜையா ஆகிய 4 பேருக்கும் 23 சென்ட்களை கிரயம் கொடுத்து விட்டார் என்றால், சரியல்ல. நான் தாக்ககல் செய்துள்ள வா.சா.ஆ.6 ன் படி எனது தகப்பனாருக்கு 2.317 சென்ட்கள் தான் மீதி இருந்தது என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 அகஸ்டின் பெயருக்கு எனது தகப்பனார் 7.500 சென்ட்க்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் மோசடியானது என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ல் சர்வே எண்.139/1 ல் வீதம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ல் சொத்து விபரத்தில் அந்த 7.500 சென்டை அடையாளப்படுத்தி வரைபடம் எதுவும் இணைக்கப்படவில்லை என்றால், சரிதான். அந்த 7.500 சென்டில் 4 மால்களுக்கு அளவுகளும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.2 ன் படி எனது தகப்பனார் 22.01.2003 அன்று 7.500 சென்ட் இடத்திற்கு உரிமையை காட்டும் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. அகஸ்டின் எனது தாய்மாமா என்றால், சரியல்ல. எனது தூரத்து உறவினர். அகஸ்டின் நாகர்கோவிலில் Holycross கலை கல்லூரிக்கு அருகில் வட்டக்கரை என்ற ஊரை சேர்ந்தவர் என்றால், சரிதான். 2003 ல் நான் சவேரியர் கல்லூரியில் வேலை பார்த்தேன். அகஸ்டின் கிரயத் தொகை எதுவும் எனது தகப்பனாருக்கு கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. 22.01.2003 தேதிக்கு பின்னர் அகஸ்டின் போக்கு வரவு செய்து பட்டா தனது பெயரில் வாங்கவில்லை என்றால், சரிதான். தாற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 நான் போலியாக தயார் செய்தது என்றால், சரியல்ல. அதற்கு Stamp paper வாங்கியது, பத்திரம் எழுதியது, சாட்சி கையொப்பங்கள் ஏற்பாடு செய்தது அனைத்தும் நான் தான் செய்தேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆனது என் தேவைக்காக தயார் செய்யப்பட்டதால் தான் அகஸ்டின் அதன் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்து கொள்ளவில்லை என்றாலும், வா.சா.ஆ.2 ன் அசல் அவரிடம் கொடுக்கப்படவில்லை என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.3 ன் படி 24.05.2004 ல் அகஸ்டினிடம் இருந்து நான் வாங்கவில்லை. அவருடைய அதிகார முகவரிடம் இருந்து நான் கிரயம் வாங்கினேன். அந்த அதிகார முகவர் ஜென்கின் எனது உறவினர் என்றால், சரிதான். வா.சா.ஆ.3 ல் எனது உறவினர் அகஸ்டின் பெயரில் உள்ள பட்டா அல்லது கரத்தீர்வை ரசீதுகள் இணைக்கப்படவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.3 ல் விஸ்தீரணம் சர்வே எண்.139/1 ல் 20.5 ஏரில் வீதம் என்று குறிப்பிட்டிருக்கிறது என்றால், சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் 3 ல் வடக்கு பக்கம் நடைபாதை போட்டிருப்பது தவறு என்றால், சரியல்ல. நடைபாதை

என்று நான் சொல்லும் விபரம் வேறு எந்த ஆவணத்திலும் துலங்காது என்றால், சரியல்ல. தெற்கு பக்கம் நடைபாதை என்று புஸ்பராஜ்க்கு எழுதிக் கொடுத்த 2.500 சென்ட் பூமி எல்லையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு வா.சா.ஆ.2 மற்றும் 3–ன் படி 7.500 சென்டிற்கு உரிமையோ, கைவச அனுபவமோ கிடைக்கவில்லை என்றால், சரியல்ல. நான் C பட்டிகை சொத்து சம்பந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் 08.03.2013 அன்று தமிழக ஆளுநருக்கு 984/13 ஆவண எண்ணில் இஷ்டதானம் எழுதிக் கொடுத்தேன் என்றால், வழிப்பாதைக்காக எழுதிக் கொடுத்தேன். அதில் சர்வே எண்.139/1 ல் 1.250 சென்ட் தானமாக எழுதிக் கொடுத்திருக்கிறேன். மேலும் அதில் வின்செண்ட் சர்வே எண்.138/8 ல் அரை சென்ட் தானமாக எழுதிக் கொடுத்தார் என்றால், சரிதான். 22.02.2013 அன்று தமிழக ஆளுநருக்கு 785/13 ஆவணம் இஷ்டதானம் எழுதிக் கொடுத்தேன் என்றால், சரிதான். அந்த ஆவணப்படி நான் சர்வே எண்.139/1 ல் 1.500 சென்ட் கொடுத்திருக்கிறேன் என்றால், சரிதான். நானும், வின்செண்ட், அலெக்ஸாண்டர், ஜாண் ஜோசப் ராஜ், வர்க்கீஸ் மேரி ஆகிய 5 பேரும் சேர்ந்து 3.250 செண்ட்ஸ் தானப்பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறோம் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 மற்றும் 5 ன் படி OS.No.119/2007 ல் எனது உறவினர் ஆல்பின் ஆல்பட் அமல் ராஜ்க்கு 124 சதுர லிங்க்ஸ் பாதைக்காக விட்டுக் கொடுத்து அந்த வழக்கை சமாதானமாக முடித்துக் கொண்டோம் என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.